7. ஒழுங்குப் பிரச்சினை.

பேரவையின் அதிகாரிகள் மாடத்தில் அமர்ந்துள்ளவர்கள் குறித்து.

திரு. பி. வி. இராஜேந்திரன் : சார் பாயிண்ட் ஆப் ஆர்டர்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நான் விசாரித்து முடிவு சொல்கிறேன் என்று சொல்லியிருக்கிறேன். என்ன பாயிண்ட் ஆப் ஆர்டர்.

திரு. பி. வி. இராஜேந்திரன்: சார், இது சம்பந்தமாக அல்ல. Point of Order. Speaker Sir, Rule No. 284—"Admission to the various galleries of the Assembly Chamber during the sittings of the Assembly shall be regulated in accordance with regulations made by the Speaker." இதை நீங்கள் ஒரு மரபாக வைத்திருக்கிறீர்கள். உங்களுக்கு இருக்கிற ஒரு உரிமை. நான் இந்த அவையிலே 9-வது சட்டமன்றத்திலேயும் சரி, 10-வது சட்டமன்றத்திலேயும் சரி, அபிஷியல் காலரியில் அரசு துறை செயலாளர்களும், ஏனைய அரசு அதிகாரிகளும் இருந்துதான் பார்த்திருக்கிறேன். தமிழ்நாடு பாட நூல் நிறுவனத்தினுடைய தலைவர் அரசினுடைய அலுவலராக வருகிறாரா? இன்றைக்கு விவாதமே தமிழ்நாடு பாட நூல் கழகம். அது அரசுத் துறை அல்ல என்ற வாதம் நீதிமன்றம் வரை சென்றிருக்கிற இந்த நேரத்தில் அவர்கள் அனுமதிக்கப்பட்டிருக்கிறார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: கல்வித் துறையின் கீழ் இருக்கக் கூடிய தன்னாட்சி மிக்க அமைப்புகளுடைய தலைவர் என்ற முறையில் அவர்கள் வந்திருக்கிறார்கள். அதைப்போலத்தான் தன்னாட்சி மிக்க பல்வேறு கழகங்களுடைய தலைவர்கள் அந்தந்த தினத்தின்போது இங்கே வந்திருக்கிறார்கள். அந்த வகையிலே அவர்களும் வந்திருக்கிறார்கள். அனுமதித்து இருக்கிறேன்.

திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்: சார் பாயிண்ட் ஆப் ஆர்டர்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இதிலே பாயிண்ட் ஆப் ஆர்டர் இல்லை, நான் சொல்லிவிட்டேன். நேரத்தை வீண் அடிக்கிற முயற்சியாக இருக்கக்கூடாது.

திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ் : Honourable Speaker, Sir, The House has got two galleries inside. One is official Gallery and the other is Press Gallery. A person admitted to that gallery should be an official. Whether the Speaker deems her as an Official?

அதுதான் எங்களுக்குத் தெரிய வேண்டும். வேறு ஒன்றும் அல்ல.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அபிஷியல் என்று சொல்கிறபோது அதிலே நான்-அபிஷியலும் வரத்தான் செய்யும். இன்றைக்கு தன்னாட்சி மிக்க அமைப்புகளுடைய தலைவர்கள் இந்தப் பேரவையில் அவர்கள் பற்றிய விவாதம் வருகிறபோது இங்கே வந்திருக்கிறார்கள். அந்த வகையிலே அவர்களுக்கு அனுமதி அளிக்கப்பட்டிருக்கிறது.

திரு. எஸ். ஆர். பாலசுப்ரமணியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அபிஷியல் காலரியிலே அபிஷியல்ஸ் அல்லாதவர்கள் வர முடியாது. எனவே நேரிடையாக நீங்கள் தீர்ப்பு சொல்லுங்கள். Is she an official or not? If she is an official, she can definitely sit. If she is not an official she cannot sit. I want a ruling.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இதேபோன்று பாட நூல் நிறுவனத்தினுடைய நிர்வாக இயக்குநர்கள், தலைவர்களாக இருந்தவர்கள் இந்தப் பேரவையில் அந்த இடத்திலே அமர்ந்திருக்கிறார்கள். அந்த மரபுப்படி அவரும் அமர்ந்திருக்கிறார். இதுவரையிலும் அமர்ந்திருக்கிறார்கள். அந்த வகையிலே இவரும் அமர்ந்திருக்கிறார்.

திரு. எஸ். ஆர். பாலசுப்ரமணியன்: In that case, We take her as an official of the Government.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இல்லை, இதுவரையில் இருந்த மரபுப்படி தன்னாட்சி மிக்க அமைப்புகளாக இருந்தாலும் அதில் அலுவல் சாராத தலைவர்களாக நியமிக்கப்பட்டவர்கள் அமர்ந்திருக்கிறார்கள். அந்த மரபுப்படி தான் இவர்கள் இன்றைக்கு அனுமதிக்கப்பட்டிருக்கிறார்கள், அமர்ந்திருக்கிறார்கள். திரு குமரி அனந்தன்.

திரு. டி. எம். ரங்கராஜன்: The Rule does not say whether it is official or non-official....

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அதை நான் சொல்லிவிட்டேன். அதனால் அதில் ஒன்றும் விவாதமே இல்லை. இதுவரையிலும் அந்தப் பதவியிலே இருந்தவர்கள் அமர்ந்திருந்த மரபுப்படி அவரும் அமர்ந்து இருக்கிறார்.